TIPS FOR PARENTS

# Understanding the *Safe Schools Act*




# பாதுகாப்பான பாடசாலைச் சட்டத்தைப் புரிந்துகொள்ளல்

**மாணவர்கள் பாடசாலையில் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பது பற்றிய உத்தியோக பூர்வமான கொள்கை எதுவும் இருக்கிறதா?**

ஆம். கல்விச் சட்டத்தில் (Education Act) அடங்கி உள்ள மாகாணத்துக்குரிய *நடத்தைக்கான விதிமுறைக் கோவையில்* (*Code of Conduct*) மாணவர்களின் ஒழுக்கத்துக்குரிய மாகாண நியமங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொருத்தமற்ற நடத்தையினால் விளையக்கூடிய பலவிதமான பலாபலன்கள் பற்றியும் இதில் கூறப்படுகிறது. இதில் அடங்கியுள்ள விதிமுறைகள் கூட்டாக *பாதுகாப்பான பாடசாலைகள் சட்டம்* (*Safe Schools Act*) என அழைக்கப்படுவதுடன், இவை 2008ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்தில் நடைமுறைக்கு வந்துள்ளன.

**பாதுகாப்பான பாடசாலைகள் சட்டம் மாணவர்களை இடைநிறுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் பற்றியும் விசேட கவனம் செலுத்துகிறதா?**

இல்லை. இடைநிறுத்துதல் (suspension) மற்றும் வெளியேற்றுதல் (expulsion) என்பவற்றில் சென்று முடியக்கூடிய செயல்பாடுகள் பற்றி இச்சட்டம் மேலெழுந்தவாரியாகக் கூறுகிற போதிலும், அவற்றைத் தடுத்தல் மற்றும் ஆரம்பநிலையில் தலையிட்டு நிறுத்துதல் என்பவற்றிலேயே கூடிய கவனம் செலுத்துகிறது. அது இவ்வாறு:

- ஒவ்வொரு பாடசாலைச் சபையும் ஒவ்வொரு பாடசாலையும் தமக்கென்று சொந்தமாக *நடத்தைக்கான விதிமுறைக்கோவை* ஒன்றினைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும். இதில் *மாகாண நடத்தைக்கான விதிமுறைக் கோவை*யும் உள்ளடங்கி இருப்பதுடன் குறித்த சில வகையான நடத்தைகளின் பிரதிபலன்களும் வரையறுத்துக் கூறப்படவேண்டும். நடத்தைக்கான விதிமுறைக்கோவை பொதுமக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன் வழக்கமாக இது பாடசாலையில் ஓரிடத்தில் ஒட்டப்பட்டு இருக்கும். "படிப்படியாக நிலைநாட்டப்படும் ஒழுக்காறு" (progressive discipline) பற்றியே இச்சட்டம் வலியுறுத்திக் கூறுகிறது. இதன் அர்த்தம் என்னவெனில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பின்பற்ற வேண்டிய மிகப்பொருத்தமான வழியையே பாடசாலை அதிபர் கருத்துக்கு எடுப்பார் என்பதாகும். மாணவரின் பெற்றோரைச் சந்திப்பது, எழுத்துமுறையிலான ஒரு வேலை கொடுப்பது அல்லது ஆலோசனை வழங்குவது போன்றவை இதில் அடங்கலாம். சம்பந்தப்பட்ட நடத்தை மேலும் தொடருமானால் அல்லது பாரதூரமான ஒன்றாக அமையுமானால் ஒழுக்காற்று நடவடிக்கை உயர்த்தப்பட்டு மாணவர் இடைநிறுத்தப்படலாம் அல்லது மிகஅரிதான சந்தர்ப்பங்களில் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்படலாம்.
- ஒரு மாணவரை அதிபர் ஒருவர் இடைநிறுத்துதல் செய்யமுன்னர் அவர் அம்மாணவர் ஏன் குறிப்பிட்ட விதத்தில் நடந்து கொண்டார் என்பதை எண்ணிப்பார்த்தல் அவசியமாகும். இனத்துவேஷம் அதில் அடங்கியிருந்ததா? அடாவடித்தனம் காணப்பட்டதா? சம்பந்தப்பட்ட மாணவர் விசேடித்த கல்விபெறும் ஒருவரா? இவையெல்லாம் "குற்றத்தின் கடுமையைக் குறைக்கும்" காரணிகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை கருத்தில் எடுக்கப்படுவதுடன், குறித்த மாணவர் தொடர்ந்து பெறும் கல்வியினை எவ்வாறு இடைநிறுத்துதல் பாதிக்கும் என்பதையும் கருத வேண்டும்.
- மாணவர்களை ஆசிரியர்கள் இடைநிறுத்துதல் செய்யமுடியாது. பாடசாலை அதிபருக்கு மட்டுமே அந்த அதிகாரம் உண்டு. பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலைச் சபைப் பணியாளர்கள் ஆகியோருடன் சேர்ந்து நம்பிக்கைப் பொறுப்பாளர் குழு ஒன்றினால் மட்டுமே ஒரு மாணவரை வெளியேற்றும் தீர்மானத்தை எடுக்க முடியும்.

**ஒரு மாணவர் இன்னொரு மாணவரிடம் அடாவடித்தனம் செய்தார் என்பதற்காக அவர் இடைநிறுத்துதல் செய்யப்படலாமா?**

ஆம். அடாவடித்தனம் (bullying) செய்தல் என்பது பாரதூரமான ஒரு குற்றமாக அடையாளம் காணப்படுகிறது. அடாவடித்தனம் செய்தால் அதற்கான விளைவுகள் உண்டு. பாடசாலை நிலத்துக்கு வெளியே அல்லது இணையம் வழியாக அடாவடித்தனம் நடந்தாலும் இது உண்மையாகும். அடாவடித்தனம் நடைபெறாது தடுப்பதற்கு உதவி செய்யவெனப் பாதுகாப்பான பாடசாலைக் குழு ஒன்று ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்க வேண்டும்.

**பாடசாலை நிலத்துக்கு வெளியே இடம்பெறும் நடத்தையையும் இவ்விதி முறைகள் கட்டுப்படுத்துகின்றனவா?**

ஆம். உதாரணமாக, ஒரு மாணவர் இன்னொரு மாணவரை அல்லது ஓர் ஆசிரியரை தனது சொந்த வீட்டில் இருந்து கொண்டு இணையம் வழியாக பயமுறுத்தினால் அந்த நடத்தை பாடசாலை நிலவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஒன்றாகக் கருதப்படலாம் என்பதுடன், ஒரு மாணவர் இதற்காக 20 நாட்கள் வரையில் இடைநிறுத்துதல் செய்யப்படலாம்.

**ஒரு மாணவர் இடைநிறுத்துதல் செய்யப்படுகையில் என்ன நடைபெறுகிறது?**

- பாடசாலை அதிபர்கள் மாணவரின் பெற்றோருக்கு 24 மணிநேரத்தின் உள்ளே எழுத்து மூலம் இடைநிறுத்துதல் பற்றி அறிவிப்பதற்குச் சகல முயற்சியும் எடுத்தல் வேண்டும். அந்த அறிவித்தலில் இடைநிறுத்துதல் செய்தமைக்கான காரணம், இடைநிறுத்தப்படும் மாணவருக்குப் பொருத்தமான ஏதாவது திட்டங்கள், மேன்முறையீடு செய்வதற்கு உள்ள உரிமை, மேன்முறையீடு செய்யும் செயல்முறை ஆகியன அடங்கியிருத்தல் வேண்டும்.
- ஒரு மாணவர் 1 முதல் 20 பாடசாலை நாட்கள் வரையில் இடைநிறுத்துதல் செய்யப்படலாம். இந்த இடைநிறுத்துதல் காலத்தில் சம்பந்தப்பட்ட மாணவர் பாடசாலைக்கு வருகை தர முடியாது என்பதுடன், பாடநெறித் திட்டத்திற்குப் புறம்பானவை உட்பட எவ்வித பாடசாலைச் செயல்பாடுகளிலும் பங்குபற்ற முடியாது.
- மாணவர்கள் 5 நாட்களுக்கு மேல் இடை நிறுத்துதல் செய்யப்படுகையில் அவர்கள் தொடர்ந்து கற்பதற்கு உதவும் ஏதாவது ஒரு பாடமுறைத்திட்டம் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். ஆனாலும் தம் விருப்பப்படி அவர்கள் அதற்குப் போக மறுக்க முடியும்.
- மாணவர்கள் 10 நாட்களுக்கு மேல் இடை நிறுத்துதல் செய்யப்படுகையில் ஏதாவது ஒரு பாடமுறைத்திட்டத்துடன் *கூடவே* ஆலோசனை வழங்கல் போன்ற பாடமுறைத்திட்டத்தைச் சேர்ந்திராத சேவைகளும் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.
- எல்லா விதமான இடைநிறுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் நடவடிக்கைகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமை அதிபர்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் ஆகியோருக்கு உண்டு. ஆனால் மேன்முறையீடு சம்பந்தமாகப் பாடசாலைச் சபை எடுக்கின்ற முடிவே இறுதியானதாக அமையும்.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com*.

For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*

© People for Education 2009

THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

toronto community foundation

# Understanding the Safe Schools Act

- ஒரு மாணவர் ஆணைமுறையிலான இடைநிறுத்துதல் பிரமாணத்தின் கீழ் இடைநிறுத்துதல் செய்யப்படுகையில், அம்மாணவரை வெளியேற்றுதல் செய்யப் பரிந்துரைக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக அதிபர் விசாரணை ஒன்றை நடாத்தவேண்டும்.
- ஒரு மாணவரை வெளியேற்றுதல் செய்யவேண்டும் என்று ஓர் அதிபர் பரிந்துரைக்கிறார் என்றால், அம்மாணவரை வெளியேற்ற வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக பாடசாலைச் சபை ஒரு விசாரணையை நடாத்த வேண்டும். இந்த விசாரணையின் பொழுது பாடசாலை அதிபர், சம்பந்தப்பட்ட மாணவர், மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மற்றும் பாடசாலைச் சபை உறுப்பினர் ஆகியோர் பங்குபற்றுவர்.
- ஒரு மாணவர் வெளியேற்றுதல் செய்யப்படுவாராயின் அந்த மாணவருக்கு என இன்னுமொரு பாடசாலையைப் பாடசாலைச்சபை பெற்றுக் கொடுக்க வேண்டும், அல்லது வெளியேற்றுதல் செய்யப்படும் மாணவர்களுக்குரிய கல்வித் திட்டம் ஒன்றில் அம்மாணவரை அமர்த்தவேண்டும்.
- வெளியேற்றுதல் செய்யப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் என ஒரு மாணவ செயல்முறைத் திட்டம் (Student Action Plan /SAP) தயாரிக்கப்படுதல் வேண்டும். இத்திட்டத்தினைப் பாடசாலைப் பணியாளர்கள், சம்பந்தப்பட்ட மாணவர், அவரது பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாடசாலை அதிபர் தயாரிக்க வேண்டும். இத்திட்டத்தில் அதன் இலட்சியங்கள், வெற்றியை அளவிடும் முறைகள் மற்றும் குறித்த மாணவருக்குரிய ஆதார உதவி வகைகள் என்பவை அடங்கி இருக்கும்.
- இடைநிறுத்துதல் செய்யப்படும் ஒரு மாணவர் வகுப்புக்குத் திரும்பி வருவதற்கு முன்பாக, அவருக்கென ஒரு மீள்வருகைத் திட்டம் உருவாக்கப்படல் வேண்டும். அவர் திரும்பி வரும் நிகழ்வு தடங்கல் இன்றி நிறைவேறுவதை உறுதிப்படுத்துவதற்கு இது உதவியாக அமையும்.

**சுயமாகவே தன்னியல்பில் இடைநிறுத்துதல் நிலைக்குக் கொண்டு செல்லும் விடயங்களின் பட்டியல் ஒன்று உண்டா?**

| **இடைநிறுத்துதலுக்குக் கொண்டு *செல்லக்கூடும்* என்ற வகையான செயல்பாடுகள்** | **இடைநிறுத்துதலுக்குக் *கட்டாயமாகக்* கொண்டு செல்வனவாய் அதிபர் வெளியேற்றுதல் பற்றிக் *கருதவேண்டிய* செயல்பாடுகள்** |
|---|---|
| பாரதூரமான உடல்தீங்கு விளைவிக்கப் போவதாகப் பயமுறுத்தும் வார்த்தை கூறுதல் | ஆயுதம் ஒன்றை வைத்திருத்தல் |
| மதுபானம் அல்லது சட்டவிரோதமான போதை வஸ்துகள் வைத்திருத்தல் | ஆயுதம் ஒன்றை உபயோகித்து வேறொருவருக்கு உடல் தீங்கினை உண்டாக்கல், அல்லது உண்டாக்கப் போவதாகப் பயமுறுத்தல் |
| மதுபானம் குடித்த நிலையில் காணப்படுதல் | இன்னொருவர் மீது உடல்ரீதியாகத் தாக்குதல் மேற்கொண்டு, அதனால் மருத்துவத் துறையினர் ஒருவரிடம் சிகிச்சை தேவைப்படும் உடற்காயம் ஒன்றினை உண்டாக்குதல் |
| ஆசிரியர் அல்லது அதிகார அந்தஸ்தில் உள்ள ஒருவரை நோக்கி வசை மொழி கூறுதல் | பாலியல் ரீதியாகத் தாக்குதல் |
| மாணவரின் பாடசாலையில் உள்ள பாடசாலைச் சொத்துக்கு, அல்லது அவரது பாடசாலை வளாகத்தில் இடம் வகித்து நிற்கும் சொத்துக்கு பெரிய அளவில் சேதம் விளைவிக்கும் நாசவேலை ஒன்றைச் செய்தல் | ஆயுதங்கள் அல்லது சட்டவிரோதமான போதை வஸ்துகள் என்பவற்றை விற்பனை செய்தல் |
| அடாவடித்தனம் செய்தல் | கொள்ளை அடித்தல் |
| பாடசாலைச்சபைக் கொள்கையின் கீழ் அதிபர் இடைநிறுத்துதல் செய்யக்கூடியதான வேறு ஏதாவது ஒரு செயல்பாடு | கனிஷ்ட வயதினர் ஒருவருக்கு மதுபானம் கொடுத்தல் |
| | பாடசாலைச் சபையின் கொள்கையின் கீழ், பாடசாலை அதிபர் ஒரு மாணவரை இடைநிறுத்துதல் செய்யக்கூடிய வகையிலான வேறு ஏதாவது செயல்பாடு. இதன் காரணத்தால் அவர் சம்பந்தப்பட்ட மாணவரை வெளியேற்றுதல் செய்வதற்குச் சபையிடம் பரிந்துரைக்க வேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காக ஒரு விசாரணையை நடத்தக் கூடும். |

ஒவ்வொரு பாடசாலைச் சபையும் ஒவ்வொரு பாடசாலையும் தமக்கெனச் சொந்தமான பாதுகாப்பான பாடசாலைகள் கொள்கைகளை வைத்திருத்தல் வேண்டும். உங்களுடைய பாடசாலைச் சபையின் கொள்கை பற்றி மேலதிக தகவலினை உங்கள் பாடசாலையில் அல்லது சபையின் இணையத்தளத்தில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

பாதுகாப்பான பாடசாலைகள் பற்றிய மேலதிக தகவல் பெறுவதற்குப் பின்வரும் இணையத்தளத்துக்குச் சென்று பாருங்கள்: www.peopleforeducation.com

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

People for Education is an independent parents' group working to support public education in Ontario's English, French and Catholic schools.

You can reach us at: P.O. Box 64, Station P, Toronto, Ontario, M5S 2S6
Phone: 416-534-0100 • fax: 416-536-0100 • email: info@peopleforeducation.com or visit: www.peopleforeducation.com